FWC

# வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | கிறிஸ்தவம் I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடி இடுக.**

1) திருச்சங்கம் ஒன்றைக் கூட்டுவது அதனை நடத்துவது, அனுமதிப்பது எனும் பணிகளுக்குப் பொறுப்பாய் இருப்பவர்.
   1) கருதினால்மார் 2) திருத்தந்தை 3) வத்திக்கான் பிரதிநிதி
   4) உரோமை ஆளுநர் 5) திருத்தந்தையின் செயலாளர்

2) திருச்சபையின் திருச்சங்கங்களில் முதற்சங்கமாக இருப்பது
   1) திரிதெந்தீன் சங்கம் 2) எருசலேம் பொதுசங்கம் 3) எபேசு திருச்சங்கம்
   4) முதலாம் வத்திக்கான் சங்கம் 5) நிசேயா திருச்சங்கம்.

3) கிறிஸ்து பிதாவோடு ஒரேபொருளானவர் செனித்தவர். உண்டாக்கப்பட்டவர் அல்லர் எனும் மறை உண்மையை எடுத்துக் கூறிய திருச்சங்கம்
   1) எபேசு திருச்சங்கம் 2) கல்செடோன் திருச்சங்கம் 3) நிசேயா திருச்சங்கம்
   4) கொன்ஸதாந்தி நோபின் 5) திரிதெந்தீன் சங்கம்

4) "கிறிஸ்தவ இலத்தீன் இலக்கியத்தின் தந்தை"என சிறப்பாக அழைக்கப்பட்டவர்.
   1) புனித ஜெரோம் 2) புனித சிறில் 3) புனித அகுஸ்தினார்
   4) தெர்த் துலியன் 5) ஓரிஜன்

5) எட்டாம் நுற்றாண்டில் ஜேர்மனியின் திருத்தூதராக அழைக்கப்பட்டவர்.
   1) புனித பொனிபாஸ் 2) தூய பெனடிக் 3) தூய பற்றிக்
   4) புனித றொமோல்ட் 5) புனித கொலம்பா

6) பத்தாம் நூற்றாண்டில் திருச்சபையில் உருவாகிய புத்துணர்ச்சிக்குப் பெருமளவில் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தது.
   1) ஆயர்களின் வாழ்க்கை முறை 2) பிரான்சில் உருவான துறவறவாழ்க்கை முறை
   3) திருச்சபை தந்தையர்களின் ஊக்கம். 4) பேரரசில் ஆட்சி மாற்றம்
   5) பொது நிலையினர் பதவிகளுக்கு வந்தமை.

7) "அன்னையும்,ஆசிரியையும், அவனியில் அமைதி" எனும் சுற்று மடங்களை எழுதியவர்.
   1) திருத்தந்தை 12ம் பத்திநாதர் 2) திருத்தந்தை 10ம் பத்திநாதர்
   3) திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் 4) திருத்தந்தை 23 ஆம் அருளப்பர்
   5) திருத்தந்தை 13ம் சிங்கராயர்

8) "மறுமலர்ச்சிக்காலத்தில் எழுதப்பட்ட சில நூல்களின் தொகை
   A. கார்மேல்மலை ஏற்றம்
   B. உள்ளக மாளிகை
   C. நிறை வாழ்வின் வழி
   D. இருண்ட இரவு
   E. ஆன்மகப்பாடல்
   இந்நூல்களில் புனித சிலுவை அருளப்பரினால் எழுதப்பட்ட நூல்களைக் குறிக்கும் விடைத் தொகுதி
   1) A, C, E 2) B, C, D 3) A, D, E 4) A, B, C 5) C, D ,E

9) “கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள்” எனும் நூலை இலத்தீன் மொழியில் எழுதப்பட்டு வெளியிட்ட மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயச்சிந்தனையாளர்களில் வருவர்
1) ஜோன்கல்வின் 2) மாட்டீன் லூதர் 3) சுவிங்ளி
4) தோமஸ் முன்றசரின் 5) வில்லியம் பூத்

10) “நேறும் நோவாறும்” (தொழிலாளர் சாசனமட என்னும் சுற்றுமடலை எழுதியவர்
1) திருத்தந்தை 10 ஆம் பத்திநாதர் 2) திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர்
3) திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் 4) திருத்தந்தை 23 ஆம் அருளப்பர்
5) திருத்தந்தை 11 ஆம் பத்திநாதர்

11) போர்த்துக்கேய மிசனறிமாரை முதன் முதலில் இலங்கைக்கு வரவழைத்த இலங்கை மன்னன்.
1) XI ஆம் தர்மபராக்கிரமபாகு 2) 1 ஆம் சங்கிலி 3) VII ஆம் புவனோகபாகு
4) VI ஆம் விஜயபாகு 5) 1 ஆம் இராஜசிங்கன்

12) திருச்சபைக்கு எதிரான முதலாவது, பத்தாவது கலாபனைகளை முன்னெடுத்த உரோமப் பேரரசர்கள்
1) நீரோ, தொமிசியன் 2) தொமிசியன், வலேரியன் 3) திராஜன், தியோக்கிளேசியன்
4) நீரோ, வலேரியன் 5) நீரோ, தியோக்கிளேசியன்

13) சிலுவைப் போர் முன்னெடுப்பதற்கு முக்கிய காரணம்
1) கிறிஸ்தவர்கள் புனித பூமியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்
2) இஸ்லாமியரை தண்டித்தல்
3) கீழ் நாட்டு கிறிஸ்தவர்களுக்கு ஆதரவு வழங்குதல்
4) திருத்தந்தையின் கட்டளைக்கு கீழ்ப்படிதல்
5) இஸ்லாமிய நாடுகளில் கிறிஸ்தவத்தைப் பரப்புதல்

14) மார்ட்டின் தூதரின் வாழ்வுடன் பொருந்தாத கூற்று
1) திருவிலியம் ஜேர்மன் மொழியில் மொழிபெயர்ப்பு செய்தார்
2) திருமுழுக்கு, உறுதிபூசுதல் இரண்டுமே அருளடையாளங்கள்
3) ஒரு நம்பிக்கையால் மட்டும் மீட்படைய முடியும்.
4) பரிபூரணபலன் என்பதற்கு எதிராகப் போதித்தார்
5) கேள்வி - பதில் முறையில் மறைக்கல்வி நூலை அச்சிட்டார்.

agaram.lk

15) திருப்பவியில்சொல்லப்படும்நிசேயா விசுவாசப்பிரமாணம் திருச்சபை முழுவதும் விசுவாச சத்தியமாக ஏற்றுக் கொண்ட திருச்சங்கம்
1) எருசலேம் சங்கம்
2) நிசேயா திருச்சங்கம்
3) கல்சிடோன் திருச்சபை
4) கொன்ஸ்தாந்தி நோபிள் திருச்சங்கம்
5) எபேசு திருச்சங்கம்

16) ஜோன் வெஸ்லியின் நற்செய்திப்பணியின்மறு சீரமைப்பாக ஆரம்பிக்கப்படட சபை
1) அங்கிலிக்கன்சபை 2) புரட்டஸ்தாந்து சபை 3) இலங்கைத் திருச்சபை
4) பிரஸ்பிட்டேரியன் சபை 5) மெதடிஸ்த சபை

17) உரோமைக் கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்களைத்துன்புறுத்தப் பிரதான காரணமாய் அமைந்தது.
1) உரோமைய பேரரசை விட இறையரசே முடிவில்லாதது என்ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கை
2) கிறிஸ்தவர்களின் இரகசிய செபம்
3) கிறிஸ்தவர்கள் திருச்சபையின் தலைவர்களுக்குக் கீழ்ப்படிதல்
4) அமைதியான வாழ்க்கை முறை
5) கலாசார பண்பாடுகளின் மாற்றம்

18) பதினோராம் நூற்றாண்டில் திருச்சபை வரலாற்றில் இடம் பெற்ற அபாக்கியமான நிகழ்வு.
1) பேதகங்கள் ஏற்பட்டமை
2) மறுமலர்ச்சி சிந்தனையாளர்கள்
3) சிலுவைப் போர்
4) துறவறசபைகளின் ஆரம்பம்
5) பிரான்சியப் புரட்சி

19) திருச்சபைத் தந்தையர்கள் எழுதிய சில நூல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ஹெக்சப்லா
B - செல்சியுஸ்சிற்கு எதிராக எழுதப்பட்ட நூல்
C - கிறிஸ்தவ மறைக் கோட்பாடுகள்
D - நிறைவாழ்வின் வழி
E - இறைவனின் நகரம்
இவற்றில் ஒரிஜன் எழுதிய நூல்கள்
1) A , B , E 2) C , D , E 3) A ,D , E 4) A , B ,C 5) B , C , D

20) ஒன்பாதம் நூற்றாண்டின் இறுதியரைப்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவில் காஷார்ஸ், ஸ்லாவிக் கோத்திர மக்கள் மத்தியில் கிறிஸ்தவ மறையைப் பரப்பும் தூதுப்பணிக்கு உத்வியவர்கள்
1) புனித சிறில் , புனித ஜஸ்டின்
2) தூய மெதோடியஸ் , தூய சிறிஸ்
3) தூய மெதோடியஸ், தூய ஜெறோம்.
4) தூய சிறில், தூய ஜெறோம்
5) புனித கொலம்பா, புனித பொனிபஸ்

21) கி.பி 1625 இல் பிரான்ஸ் நாட்டின் மறைமாவட்டக்குருக்களின் புனிதத் தன்மையை வளர்ப்பதற்கென துறவறப்பையை ஆரம்பித்தவர்
1) புனித வின்சென்ட்டிபோல்
2) புனித லொயோலா இக்னேசயஸ்
3) புனித பீற்றர் கனிசியஸ்
4) புனித பெட்றிக் ஒசானம்
5) புனித மத்தேயு டீ பஸ்ஸி

22) இரண்டாம் வத்திக்கான சங்கத்தின் படிப்பினைகள் அடங்கிய வெளியீடுகளில் முதலாவதாகப் பிரகடனம் செய்யப்பட்டது
1) இறைமக்கள் எனும் கொள்கைத் திரட்டு.
2) திருவழிபாடு பற்றிய கொள்கைத் திரட்டு.
3) திருச்சபையின் நற்செய்திப்பணி எனும் கொள்கைத் திரட்டு.
4) பிற மதங்களுடனான உரையாடல்.
5) பொது நிலையினரின் மேய்ப்புப் பணிக்கொள்கைத் திருட்டு.

agaram.lk

23) ஆரிய பேதகத்திற்கு எதிராக மறை உண்மையை உறுதி செய்த சபைத் தந்தை
1) புனித பசில்
2) நிசா கிரகோரி
3) அலெக்சாந்திரிய ஆயர் புனித சிறில்
4) அலெக்சாந்திய புனித அத்தனாசியார்
5) கொன்ஸ் தாந்தி நோபிள் ஆயர் பிளேவியன்

24) பதினொராம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இறையியல் என்பது விளக்கத்தினை தேடிச் செல்லும் விசுவாசமாகும் எனும் வரைவிலக்கத்தினை முன்னவத்தவர்
1) பீற்றர் அபேலார்ட்
2) பீற்றர் லெம்பட்
3) அலெகசாந்தியபுனித அன்சலம்
4) அலெக்சாந்திய புனித அத்தனாசியார்
5) கொன்ஸ்தாந்தி நோபிள் ஆயர் பிளேவியன்

25) A – நோயாளரைப் பராமரித்தனர்
B – புரொட்டஸ்தாந்து சீர்திருத்தவாதிகளுக்கு எதிராக போதித்தனர்.
C – எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.
மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 16ம்நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய துறவற சபை.
1) வின்சென்சியன்சபை
2) கப்புச்சின்சபை
3) இயேசு சபை
4) கார் மேல் சபை
5) குளுனி

26) தேவதாய் ஆன்ம சரீரத்துடன் பரலோகத்திற்கு ஆரோகணமானார் என்ற பலஸ்தீனாவின் யூதேயா, சமாரியா, இதுமேயா ஆகிய பிரதேசங்களின் அதிகாரம் காணப்பட்டது.
1) திருத்தந்தை 23 ஆம் அருளப்பர்
2) திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர்
3) திருத்தந்தை 10 ஆம் பத்திநாதர்
4) திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர்
5) திருத்தந்தை 8 ஆம் பொனிபஸ்

27) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் மறைபணியாற்றிய முதலில் வந்த சபை.
1) இயேசு சபை
2) அகுஸ்தினார் சபை
3) குளுனி சபை
4) வல்தேசியன் சபை
5) பிரான்சிஸ்கன் சபை

28) போர்த்துக்கேய மறைபரப்பில் காணப்பட்ட முக்கியமான குறைபாடு.
1) தேசிய அங்கத்தவர் எவரையும் குருக்களாக பயிற்றுவிக்காமை.
2) இன, மத, குல பேதங்கள் பாராது செயற்பட்டமை.
3) கரையோரப் பிரதேச மக்களோடு நெருங்கிய தொடர்புள்ளமை.
4) ஆட்சியாளர்களின் ஆதரவு.
5) அரசர்களை மதம் மாற்றியமை.

29) திரித் தெந்தீன் பொதுச் சங்கத்தில் இறையியலாளராக செயற்பட்ட இயேசு சபைக்குரு.
1) லொயோலா இக்னேசியஸ்
2) பீட்டர் கனிசியஸ்
3) புனித வின்சென்சியன் போல்
4) மத்தேயு டீ பஸ்ஸி
5) புனித றொபர்ட் பெலார்மின்

30) திருமறை அறிவிப்பு துறவற சபை என அழைக்கப்பட்ட சபையினர்.
1) பிரான்சிஸ்கன் சபை
2) கார்மேல் துறவற சபை
3) டொமினிக்கன் துறவற சபை
4) வல்தேசியன் சபை
5) இயேசு சபை

31) "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவருக்குச் செவி சாயுங்கள்" என்று ஒரு குரல் ஒலித்தது. இச் சம்பவத்துடன் தொடர்புடைய இடம்.
1) கார்மேல் மலை
2) ஏர்மோன் மலை
3) ஓரேப் மலை
4) சீனாய் மலை
5) தாபோர் மலை

agaram.lk

32) புனித பவுல் 'அகபே' எனும் கிரேக்க சொல்லால் அறியத்தரும் பண்பு.
1) மகிழ்ச்சி
2) சமாதானம்
3) அன்பு
4) நன்மை
5) பொறுமை

33) பென்ஜமீன் குலத்தவரும், யூத குடும்பத்தை சேர்ந்தவருமான புனித பவுல் உரோமையக் குடியுரிமையைப் பெற்றக் கொண்டது.
1) உரோமப் பேரரசு
2) தனது தந்தையின் மூலம்
3) புற இனத்தவர் மூலம்
4) தனது தாயின் மூலம்
5) திருத்தூதர்களின் மூலம்

34) எருசலேம் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஊடாக திருச்சபையில் ஏற்பட்ட புதிய திருப்பம்.
1) கிறிஸ்தவம் அனைத்துலக மதமாதல்.
2) புற இனத்தாருக்கு விருத்த சேதனம் செய்தல்.
3) திருச்சபைத் தலைமைத்துவம் சவாலுக்குட்படல்.
4) பக்தி முயற்சிகள் மேன்மையடைதல்.
5) வழிபாட்டுச் சடங்குகள் வரையறைக்குட்படல்.

35) உரோமைய பேரரசும் யூத சமய தலைமைத்துவமும் இணைந்து குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு பகிரங்கமாக உதவி செய்ய முன்வந்தவர்.
1) நிக்கதேமு
2) இடது பக்க கள்வன்
3) பிலாத்துவின் மனைவி
4) கமாலியேல்
5) அரிமத்தியா யோசேப்பு

36) லோகோஸ் - வார்த்தை எனும் இறையியல் எண்ணக்கரு ................ நற்செய்திக்கே உரித்தானது.

1) மத்தேயு　　2) மாற்கு　　3) யோவான்
4) லூக்கா　　5) மத்தேயு, லூக்கா

37) குலமுதுவர் யாக்கோபுவின் புதல்வன் யோசேப்பு இஸ்மயேலருக்கு விற்கப்பட்ட இடம்.

1) செக்கேம்　　2) தோத்தான்　　3) எபிரோன்　　4) சமாரியா　　5) சீலோ

38) திருவிவிலியத்தில் இயேசுவின் வாழ்க்கையோடு பிணைந்துள்ள பிரதேசம்.

1) யூதேயா　　2) பாசான்　　3) எப்ரோன்　　4) கலிலேயா　　5) நைல்நதிப் பிரதேசம்

39) யூதர்களின் சமய, சமூக வாழ்க்கையின் மத்திய நிலையமாக அமைந்திருப்பது.

1) சீனாய் மலை　　2) சமாரியா　　3) கானான்
4) எருசலேம்　　5) பெத்தேல்

40) வாய்மொழி மரபுகளின் சட்ட திட்டங்களை ஏற்றுக்கொள்ளாது, எழுத்து வடிவம் பெற்ற சட்டங்களை மட்டும் ஏற்றுக் கொண்ட சமயக் குழுவினர்.

1) சதுசேயர்　　2) பரிசேயர்　　3) மறைநூல் அறிஞர்
4) குருக்கள்　　5) எஸ்சேனியர்.

41) பவுல் கொரிந்து நகரில் தன் சொந்த தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு செய்த தொழில்.

1) கூடாரக் கைத்தொழில்　　2) மந்தை மேய்த்தல்　　3) காற்றுடைப்பான் செய்தல்
4) மேற்சட்டை செய்தல்　　5) வியாபாரம் செய்தல்.

42) “தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கிறார்கள்” எனக்கூறி பவுலை எர்மசு என்றும் பர்னபாவை சேயுசு என்றும் அழைத்த இடம்.

1) தெருபை　　2) லிஸ்திரா　　3) இக்கோனியா
4) அந்தியோக்கியா　　5) பம்பிலியா

43) பவுலின் மரணத்தின் பின் எழுதப்பட்ட திருமுகங்கள்.

1) எபேசியர், கொலோசெயர், II தெசலோனிக்கேயர்.
2) I கொரிந்தியர், II கொரிந்தியர், உரோமையர்.
3) பிலிப்பியர், எபேசியர், பிலமோன், கொலோசெயர்.
4) தீத்து, I தீமொத்தேயு, II திமொத்தேயு, உரோமையர்.
5) I திமொத்தேயு, II தீமொத்தேயு, தீத்து

44) சமூக மற்றும் சமய ரீதியான சீர்திருத்தங்களைச் செய்த யூதாவின் இறுதி அரசன்.

1) யோயாக்கீம்　　2) யோயாக்கின்　　3) யோசியா
4) செதேக்கியா　　5) ரெகபெயாம்

45) இறைவன் மனிதனை விட மிகத் தெலைவில் வீற்றிருப்பவர். மனிதன் அவரிடத்தே நெருங்க முடியாது. இப்பண்பினைக் கொண்ட மரபு.

1) யாவே　　2) இணைச்சட்டம்　　3) குரு
4) எலோகிம்　　5) யாவே, குரு

46) இரண்டாவது படைப்புக் கதையின் படி மனிதன் இறைவனோடு படைப்புச் செயற்பாட்டில் தொடர்புபடுவது,

1) படைப்பை ஆளுவது　　2) படைப்பை விருத்தி செய்தல்.
3) பாவத்திலிருந்து விலகுதல்　　4) பலி ஒப்புக் கொடுத்தல்
5) உயிருள்ள அனைத்திற்கும் பெயரிடுதல்

agaram.lk

47) முதலாவது படைப்புக் கதையின் படி இரண்டாம் நாளுக்கு சமாந்தரமாக எத்தனையாம் நாள் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றது.

1) ஐந்தாம் நாள்
2) முதலாம் நாள்
3) ஆறாம் நாள்
4) நான்காம் நாள்
5) மூன்றாம் நாள்

48) யூத பாஸ்கா சடங்கில் புளியாத அப்பம் பயன்படுத்தப்படுவதன் கருத்து.

1) இறைவனோடு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடையாளம்.
2) அடிமைத் தனத்திலிருந்து விடுதலை அடைந்ததை நினைவு கூறல்.
3) இறைவனின் கட்டளையை விரைவாக நிறைவேற்ற வேண்டும்.
4) திருநாள் என்பதனால்
5) அடிமைத் தனத்தில் அனுபவித்த துன்பங்களை நினைவு கூறல்.

49) ஒழுக்கமிக்க நல்வாழ்வு வாழ இறைவாக்கினர்கள் அழைப்பு விடுத்தனர். ஆனால் மனிதரின் ஒழுக்கமற்ற செயற்பாடுகள் இயற்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. என்தைக் கூறும் பழைய ஏற்பாட்டு நூல்.

1) ஏசாயா 7 : 10 – 17
2) ஓசேயா 4 : 1 - 3
3) 2 சாமுவேல் 7 : 10 - 17
4) ஏசாயா 1 : 15 - 17
5) மீக்கா 5 : 1 - 4

50) "இச்சிறியோரில் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருத வேண்டாம். என்பதில் "சிறுவர்கள்" எனக் கருதப்படுவோர்.

1) பெற்றோரில் தங்கியிருப்போர்.
2) கைவிடப்பட்டோர்.
3) பொது மக்களை தவறான வழியில் அழைத்துச் செல்வோர்.
4) சமூகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்த முடியாத சாதாரண மக்கள்.
5) உயர் பதவி வகிப்போர்.

(2 x 50 = 100 புள்ளிகள்)

agaram.lk

வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
# Term Examination, March - 2019

FWC

| தரம் :- 13 (2019) | கிறிஸ்தவம் II | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

- பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும்
- பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01.

1) இலத்தீன் தந்தையர்கள் நால்வரின் பெயர்களைத் தருக?
2) கிறிஸ்துவைப் பற்றிய கருத்து வேறுபாடுகளை உடன் பாட்டிற்குக் கொண்டுவரும் அடிப்படையில் கூட்டப்பட்ட திருச்சங்கங்கள் நான்கினைத் தருக?
3) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் மறை பணியாற்றிய சபைகள் நான்கினைத் தருக?
4) திருத்தந்தை பதின்மூன்றாம் சிங்கராஜயர் ஆற்றிய பணிகள் நான்கினைத் தருக?
5) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளில் கோட்பாடுகள் நான்கினைத் தருக?

(5 x 4 = 20 புள்ளிகள்)

02.

1) பத்றோ ஆடோதிட்டம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் நான்கினைக் குறிப்பிடுக?
2) சிலுவைப் போரினால் ஏற்பட்ட தீமையான விளைவுகள் நான்கு தருக?
3) வில்லியம் பூத் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இரட்சணிய சேனையில் காணப்படும் விசேட அம்சங்கள் நான்கினைத் தருக?
4) உரோமையக் கலாபனையின் விளைவுகளால் திருச்சபைக்கு ஏற்பட்ட சாதகமான விடயங்கள் நான்கினைத் தருக?
5) அன்பிலிருந்து விலகிய எந்தவொரு கொடைக்கும் பெறுமதியில்லை எனும் பவுலின் கருத்திற்கமைய அன்பின் பண்புகள் நான்கினைத் தருக?

(5 x 4 = 20 புள்ளிகள்)

03.

1) பவுல் திமொத்தேயுவிற்கு எழுதிய முதலாம் திருமுகத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் நான்கு தருக?
2) ஏழாம் கலாபனைக்கு காரணமான அரசனையும், அவரது துன்புறுத்தல்கள் மூன்றினையும் தருக?
3) பதின்மூன்றாம் நூற்றாண்டின் உயர் கல்விக்காக தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்கள் நான்கினைத் தருக?
4) புனித அசிசி பிரான்சிஸ் வாழ்வை மாற்றக் காரணமாய் அமைந்த நிகழ்வுகள் நான்கினைத் தருக?
5) அலெக்சாந்திரியா புனித அத்தனாசியார் திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் நான்கினைத் தருக?

(5 x 4 = 20 புள்ளிகள்)

## பகுதி II

04. அ) போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்துள்ளார்கள் என்பதற்கான சான்றாதாரங்கள் ஐந்தினைத் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) போர்த்துக்கேயரின் ஆட்சியினால் இலங்கைக்கு கிடைத்த சாதகமான பெறுபேறுகளை விளக்குக? (10 புள்ளிகள்)

05. அ) மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமய சிந்தனையாளர்களில் ஒருவரான மார்ட்டின் லூதரினைப் பற்றிக் குறிப்பிட்டு அவரின் பிரதான படிப்பினைகளை விளக்குக? (10 புள்ளிகள்)

ஆ) திரிதெந்தீன் பொதுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தினை குறிப்பிட்டு அச் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை விளக்குக? (10 புள்ளிகள்)

06. அ) எபேசு திருச்சங்கம் கூட்டப்பட்டதற்கான காரணத்தையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் விளக்குக? (10 புள்ளிகள்)

ஆ) கத்தோலிக்க திருச்சபையில் சீர்திருத்தத்தை வலியுறுத்தி துறவற சபைகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாகக் காணப்பட்டது. இதில் கார்மேல் துறவற சபையினரின் பங்களிப்பினை விளக்குக? (10 புள்ளிகள்)

07. அ) புனித தோமஸ் அக்குவினாஸின் வாழ்க்கையையும் பணிகளையும் விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) இரவலர் சபைகளில் ஒன்றான வல்தேசியன் சபையினரின் ஏழிமையான வாழ்க்கை நிலை பற்றி விளக்குக? (10 புள்ளிகள்)

08. அ) புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாலஸ்தீனாவில் பெண்களில் நிலைப்பாட்டினை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) யூத சமயமக்கள் குழுவினரிடையே பரிசேயர் மிக மதிக்கப்பட்டனர். இதனை விளக்குக. (10 புள்ளிகள்)

agaram.lk